தேசியம்
www.thesiyamnews.com
THESIYAM ජේසියම්

சிறந்ததில் மிகச்சிறந்தது
OFFSET | DIGITAL | SCREEN PRINTING | CTCP PLATE MAKING | WEDDING CARDS
MATHI COLOURS
NO. 10, MURUGESAR LANE,
NALLUR, JAFFNA.
TEL : 021 222 9285
E-mail : mathicolours@gmail.com
CUSTOMER CARE
+94 77 722 2259

குரல் - 45 | 04.05.2023 (வியாழக்கிழமை) | சித்திரை மாதம் | பக்கங்கள் 6 | ஊக்குவிப்பு : ரூ.30.00

# யாழ்.தையிட்டியில் தொடரும் பதற்றம்..!



பக்கம் 7


# தையிட்டி சட்டவிரோத விகாரைக்கு எதிராகவும்

## தனியார் காணிகளை மீளக் கையளிக்ககோரியும் கவனயீர்ப்புப் போராட்டம்

## போராட்டகளத்தில் பதற்றம்...! ஈடுபட்டவர்களை கைது செய்ய பொலிஸார் முயற்சி...!

**ஊடகவியலாளர்கள் பொதுமக்கள் தையிட்டி போராட்ட களத்தில் இருந்து கட்டாய வெளியேற்றம்**
**பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் சட்டத்தரணி நடராஜர் காண்டீபன் முற்றுகைக்குள்...**

## நாட்டின் நெருக்கடி தீர்ந்துவிடாது: சுரேஷ் பிரேமசந்திரன்



தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில் இதயசுத்தியுடன் செயற்படாமல் தீர்க்கப்படும் என்று அறிக்கை விடுவதால் மட்டும் நாட்டின் நெருக்கடி தீர்ந்துவிடாது என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க.பிரேமசச்ந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற மேதின பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க “இந்த ஆண்டு இறுதிக்குள் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும்” என்று கூறியிருந்தார்.

பக்கம் 5

## மக்களை மோசமாக பாதிக்கக்கூடிய உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு - எம்.ஏ சுமந்திரன்



உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு என்பது மிகவும் மோசமாக எமது மக்களை பாதிக்கக்கூடியது என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் தெரிவித்துள்ளார். கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சர்வ தேச நாணய நிதியத்துடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையில் அதாவது உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு செய்யப்பட வேண்டும் என்பது தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

பக்கம் 5

## தமிழ் மக்களின் பிரச்சினைக்கு ஒற்றையாட்சிக்குள் தீர்வு இல்லை! கஜேந்திரகுமார் தெரிவிப்பு

தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அரசில் அங்கம் வகிக்குமாறு மே தினத்தன்று தமிழ் கட்சிகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அழைப்பு விடுத்த நிலையில், ஒற்றையாட்சிக்குள் தீர்வு காணும் முயற்சி வீண் செயற்பாடு என சுட்டிக்காட்டி, அந்த அழைப்பை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நிராகரித்துள்ளது. “இனப்பிரச்சினை விடயத்தில் தூரமாகிச் செல்வதால் எந்தப் பயனும் இல்லை என்று நான் தமிழ்க் கட்சிகளிடம் கூறுகின்றேன். இந்த நாட்டில் உள்ள தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க



பக்கம் 5




பக்கம் 5

## துப்பாக்கி முனையில் படுகொலை! பேனா முனையால் சர்வதேசத்திற்கு கூறினோம்!

## கிளிநொச்சியில் சட்டவிரோத மணல் அகழ்வு பின்னணியில் பொலிஸார்!

பக்கம் 5

# சிவஞானம் சிறீதரன் எம்.பி. பகிரங்க குற்றச்சாட்டு

தேசியம் THESIYAM
ஆசிரியர் பீடம்
தொலைபேசி : +94 76 567 3339
மின்னஞ்சல் : thesiyamnews@gmail.com
இணையம் : www.thesiyamnews.com



## நெருப்போடு விளையாட எவரும் நினைத்துப் பார்க்கவும் கூடாது.

**தமிழ் இனத்தின் எதிர்காலம் தொடர்பில் சிந்திக்கும் நம்மவர் எவரையும் உறுத்துகின்ற முதல் விடயம் நாம் பிளவுபட்டு நிற்பதுதான்!**

யுத்தம் முடிவடைந்த 2009ம் ஆண்டு மே மாதத்திற்குப் பின்னரான கடந்த 14 வருடங்களாக தமிழ்த் தேசிய அரசியல் சக்திகளால் ஒரே கொடியின் கீழ் ஒன்றுபட்டு நிற்க முடியவில்லை.

2010ம் ஆண்டு பாராளுமன்ற பொது தேர்தலில் ஏற்பட்ட பிளவுகளும் பிரிவுகளும், இடைக்கிடையே இணைவுகள், மீண்டும் உறவுகள் என்ற ரீதியில் சில இடைவெளிகளோடு, இன்று வரையில் ஒற்றுமையீனம் என்ற ஒரு பாரிய அரசியல் பிரச்சனையாக, தமிழ் மக்கள் மத்தியில் தொடர் கதையாய் நின்று கொண்டிருக்கின்றது.

இப்பொழுது தமிழ் மாநிலத்தில் தமிழ்த் தேசியத்தின் பெயரால் இயங்கிக் கொண்டு இருக்கும் ஒன்பது அரசியல் கட்சிகள் 4 அணிகளாக பிரிந்து நிற்கின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் ரெலோ, புளொட், ஈ.பி.ஆர். எல்.எப், தமிழ்த் தேசியக் கட்சி மற்றும் ஜனநாயகப் போராளிகள் என 5 கட்சிகள் ஓரணி!

கடந்த ஆண்டு வரையில் கூட்டமைப்பில் பெரிய கட்சி எனக் கருதப்பட்ட தமிழரசுக் கட்சி இப்பொழுது தனி!

கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வழக்கம் போலவே தனி அணி!

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி என்ற பெயரில் 4 கட்சிகள் கொண்ட கூட்டணி ஒன்றுக்கு கடந்த தேர்தலில் தலைமை தாங்கி, அதன் தனி ஒரு உறுப்பினராக பாராளுமன்றத்துக்குள் பிரவேசித்த விக்னேஸ்வரன், இப்பொழுது கஜேந்திரகுமார் அணியில் இருந்து பிரிந்து வந்த மணிவண்ணன் குழுவினரையும் இணைத்துக் கொண்டு தன் சொந்த கட்சியின் பெயரில் தமிழ் மக்கள் கூட்டணி!

விக்னேஸ்வரன் தலைமை தாங்கி வந்த 4 கட்சி கூட்டணியில் தானும் ஒரு கட்சியாக பயணித்த அனந்தி சசிதரன், வேறுவழி இல்லாத நிலையில் ஒரு நேசக்கட்சியாக அவரின் கட்சியுடன் ஒரே அணி!

ஆனால் இவர்கள் எல்லோருமே, விக்னேஸ்வரனை தவிர, போர் முடிவடையும் வரை ஒன்றாக பயணித்தவர்கள் தான். புளொட் மட்டும் விதிவிலக்காக இருந்தது. தமிழ்த் தேசிய கூட்டகஊமைப்புக்குள் இணைந்து கொள்ள அது விரும்பிய போதிலும் ஏனோ அதற்கு அங்கு இடம் கிடைக்கவில்லை.

யுத்தம் முடிந்தும் ஓர் 2 ஆண்டு காலம் காத்திருந்த பின்னரே, அது இணைத்துக் கொள்ளப்பட்டது. தமிழரசுக்கட்சியின் மேலாதிக்க மனோபாவமும், நடத்தையும் தான் கூட்டமைப்பு கடந்த ஆண்டு இறுதியோடு கலைந்து போய், உடனடியாகவே 5 கட்சிகளோடு மீண்டும் கூட்டமைப்பாக மறுபிறப்பு எடுக்க காரணமானது.

தமிழ்க் கட்சிகளின் இன்றைய நிலைமைகளை மேலும் விபரிக்காமல், ஆக்கபூர்வமாக தொடர்ந்து கூறுவதானால், இந்த நிலைமைக்கு எது காரணம்? யார் காரணம்?

இந்த வேளையில் தமிழரசுக் கட்சியின் அடுத்த தலைவராக வருவதற்கு அதன் மூன்று முக்கியஸ்தர்கள் மும்முரமாக முயன்று கொண்டு இருப்பதாக வரும் உண்மையான செய்திகள் ஊர்ஜிதம் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன. சிறீதரன், சுமந்திரன், சிவஞானம்! இந்த மூன்று S களின் மோதலில், ஏற்கனவே கோஷ்டிகள், குழுக்கள் என ஈடாடிப் போயிருக்கும் தமிழரசுக்கட்சி தடுமாறி, தள்ளாடி, தடுக்கி விழப்போகின்றதா! அல்லது இவர்களில் ஒருவர் தலைவராகி ஓர் இறுக்கமான தலைமைத்துவத்தை புதிய தலைவர் S தமிழரசுக் கட்சிக்கு வழங்குவாரா! என்கின்ற கேள்வி தமிழ் அரசியல் வட்டாரங்களையும் தாண்டி கொழும்பு அரசியல் வட்டாரங்களிலும் அடிபடலாம் என்றாலும் கூட, இதைப்பற்றி எல்லாம் சாதாரண தமிழ் மக்கள் அலட்டிக் கொள்ளப்போவது கிடையாது,

ஏனெனில், எங்களுக்குள் ஒற்றுமை இல்லை என்னும் சலிப்புடன் கூடிய முணுமுணுப்பு, எங்கள் மக்கள் அரசியல் பேசும் மரணவீடுகள், திருமணவீடுகள் மற்றும் இன்னோரன்ன நிகழ்வுகள் எல்லாவற்றிலும் தவறாமல் நிகழும் சங்கதி என்பது நன்கறியப்பட்ட விடயம். எமது தமிழ் மக்கள் தமது அரசியல் வாதிகளை நன்றாக அறிந்து வைத்திருக்கின்றார்கள். தமிழ் அரசியல் மேடைகளில் பேசப்படும் ஒற்றுமை என்னும் விவகாரம் வெறும் புலுடா என்பது, அரசியலை நன்கறிந்த அனைத்து தமிழ் மககளுக்கும் அத்துபடி!

இந்த புலுடா அரசியல் காரணமாகத்தான், வடக்கில் டக்ளஸ் தேவானந்தாவும் அங்கஜன் இராமநாதனும், கிழக்கில் பிள்ளையான் எனப்படும் சந்திரகாந்தனும் வியாழேந்திரனும், எம் பிக்களாக மட்டுமின்றி அதிகாரத்துடன் கூடிய அந்தஸ்து கொண்ட பெரும் புள்ளிகளாகவும் வலம் வர முடிந்தது- முடிகின்றது.

அவர்களை விட்டுவிடலாம்! அவர்களின் அரசியல் சிங்கள தேசத்தின் செல்லப்பிள்ளைகளாக சீவிப்பதில் தான் செழித்து நிற்கின்றது என்பது நாடறிந்த உண்மை.

அது, ஒரு மாதிரியான மக்கள் சேவை!. தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் பிரிந்து மோதிக்கொண்டிருக்கும் வரையில் இத்தகைய மக்கள் சேவைக்கு புதிது புதிதாக ஆட்கள் வந்து கொண்டுதான் இருப்பார்கள்.

இப்பொழுது உள்ள கேள்வி ஒன்றே ஒன்று தான்!

விடுதலைக்காக கண்ணீரும், செந்நீரும் சிந்திய சாதாரண தமிழ் மக்கள், “கண்ணீர் விட்டே வளர்த்தோம் சர்வேசா! கருகத் திருவுளமோ? என்று கையெடுத்து கும்பிட்டு கேட்காமல் விட்டாலும் கூட, தமக்குள்ளே இடைக்கிடையே மௌனமாக வேதனைப்படும் கையறு நிலையில் தான் தமிழ்த் தேசிய எழுச்சி இப்பொழுது இருந்து கொண்டிருக்கின்றது.

வெற்றிகரமாக முடிந்துபோன ஹர்த்தாலுக்குப் பிறகும் இதுதான் நிலைமை! ஆழமாக ஆராய்ந்து பார்த்தால் இதற்கு பல காரணங்கள் உண்டு ஆனால் முதல் காரணம்- பிரதான காரணம் ஒற்றுமைப்பட தவறி நிற்கும் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் என்று தான் கூற வேண்டும். சகல முனைகளிலும் துன்பங்களையும், தொல்லைகளையும் தினசரி சந்தித்துக் கொண்டிருக்கும் தமிழ்த் தேசத்தின் மக்களின் மன உணர்வுகளை இந்த தமிழ் தேசியம் பேசும் கட்சிகளும், அவற்றின் தலைவர்களும், தளபதிகளும் எப்பொழுதுதான் உணரப் போகின்றார்கள்?

யாரோ ஒருவர் எங்கோ சொன்னது இப்பொழுது நினைவிற்கு வருகின்றது. எமது எதிரிகள் எமது இனத்துக்குள்ளே எம்மோடு தான் இருக்கின்றார்கள்! தமிழ்த் தேசத்தின் நெருக்கடியான இன்றைய நிலைமையில் இவர்களை எல்லாம் ஒற்றுமைப்பட வைப்பதற்கு என்னதான் வழி?

இதைத்தான் தமிழ் தேசத்தின் விடுதலையை தீவிரமாக நேசிக்கும் ஒவ்வொரு தமிழனும் தமிழச்சியும் இப்பொழுது உடனடியாக சிந்தித்துப் பார்க்க வேண்டும். மனம் திருந்தி இவர்கள் ஒற்றுமைப்படவில்லை என்றால், மனம் வருந்தி இவர்கள் ஒற்றுமைப்படும் காலம் கட்டாயமாக வரும்.
ஏன் எனில் வரலாறு மீண்டும் நிகழ்கின்றது என்பது ஓர் நிரந்தரமான உண்மை.

**நெருப்போடு விளையாட எவரும் நினைத்துப் பார்க்கவும் கூடாது.**

ஆசிரியர்

## தேசிய ரீதியில் சாதித்தது யாழ்ப்பாண பாடசாலை



யாழ்ப்பாணம் சுன்னாகம் மயிலணி சைவ வித்தியாலயம் தேசிய மட்டத்தில் முதலிடம் பிடித்து சாதனை படைத்துள்ளது.

மதர் ஸ்ரீலங்கா நிறுவனம் கல்வி அமைச்சுடன் இணைந்து பாடசாலை மதர் ஸ்ரீலங்கா கழகங்களுக்கிடையே சமூக பொறுப்பு, ஐக்கியம், திறன்விருத்தி ஆகியவற்றை மேம்படுத்தும் வகையில் நடத்திய போட்டியிலேயே குறித்த பாடசாலை முதலிடம் பிடித்து தேசிய மட்டத்தில் சாதித்து காட்டியுள்ளது.

வெற்றிபெற்றவர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வு கடந்த 28 ஆம் திகதி அலரி மாளிகையில் நடைபெற்றது. இதன் போது பிரதமர் தினேஷ் குணவர்த்தன,கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த ஆகியோரால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டதோடு, 3 மில்லியன் ரூபா செலவில் கணனி ஆய்வுகூடமும் அமைத்து வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது.

இப் போட்டியில் குறித்த பாடசாலை மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

இப்பாடசாலையின் நடன ஆற்றுகையும் இந் நிகழ்வில் இடம்பெற்றது. மேலும் சிறப்பாகச் செயற்பட்ட கழகத்துக்கான விருது தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கு வழங்கப்பட்டது.

உள்நாட்டு செய்திகள் - யாழ்ப்பாணம்

## உள்ளூராட்சி நிதி முகாமைத்துவ டிப்ளோமா பட்டமளிப்பு விழா!



உள்ளூராட்சி நிதி முகாமைத்துவ டிப்ளோமா பயிற்சியை பூர்த்தி செய்தவர்களுக்கான பட்டமளிப்பு விழா நேற்று முன்தினம் திருகோணமலையில் நடைபெற்றது.

அச்சமயம் நாவிதன்வெளி பிரதேச சபையில் நிதி உதவியாளராக பணியாற்றும் காரைதீவைச் சேர்ந்த முத்துலிங்கம் ரகுநந்தனுக்கான சான்றிதழை கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா ஜகம்பத் வழங்கி வைப்பதைக் காணலாம்.

உள்நாட்டு செய்திகள் - திருகோணமலை

# முக்கிய ஆவணத்தை கேட்ட டக்ளஸ்...! கொடுக்க மறுத்த சிறீதரன்...!

## சலசலப்பான அபிவிருத்தி குழு கூட்டம்...!



சீன அரசுக்கு காணி வழங்கும் விடயத்தை ஆவணம் மூலம் உறுதிப்படுத்துங்கள் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கேட்ட நிலையில், அதனை வழங்க முடியும் எனவும், தங்களிடம் கையளிக்க முடியாது எனவும் சிறிதரன் கூறியுள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்தில் குறித்த விடயம் இடம்பெற்றுள்ளது.

இரணைமடு குளத்தின் பின் பகுதியிலும், யாழ் வடமராட்சி கிழக்கு பகுதியிலும் சீனாவிற்கு காணி வழங்கும் விடயம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் தகவல் வெளியிட்டிருந்தார். குறித்த விடயத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மறுத்து வந்த நிலையில், வடமராட்சி கிழக்கில் 200 ஏக்கர் காணி வழங்கப்படுவது தொடர்பாக ஆதாரங்கள் உண்டா என சிறிதரனிடம் வினவினார்.

200 அல்ல 700 ஏக்கர் என்றும், அதற்கான கோரிக்கை ஆளுநரிடம் விடுக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் இரணைமடு குளத்திற்கு அண்மித்த பகுதியிலுமாக விண்ணப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அதற்கான ஆவணம் தன்னிடம் உள்ளதாகவும் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினரிடம் அந்த ஆவணத்தை நாளை யாழ்ப்பாணத்தில் தர முடியுமா என அமைச்சர் வினவினார்.

அதனை உங்களிடம் தர முடியாது என சிறிதரன் தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு செய்திகள் - கிளிநொச்சி

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் மக்களின் சுதந்திரம் முற்றாக பாதிக்கப்படும்- நிஷாந்தன்...!




ஜனாதிபதி ஐக்கிய தேசியக்கட்சியின் மேதினக் கூட்டத்தில் தமிழினப் பிரச்சினைக்கு தீர்வு காண அனைவரையும் ஒன்றிணையுமாறு பகிரங்க அழைப்பை தமிழ்க் கட்சிகளுக்கு விடுத்திருந்தார்.

ஏற்கனவே ஆட்சிக்கு வந்த பின் ஒரிரு தடவைகள் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டுமென கூறினார். அதனைத் தொடர்ந்து பேச்சு வார்த்தைகளும் இடம்பெற்ற நிலையில் இவ்வாறு கூறியமை புதிய விடயமல்ல என தமிழ்த் தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நிஷாந்தன் தெரிவித்தார்.

யாழில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சிறுபான்மை அரசியல் கட்சிகள் மற்றும் பிரதிநிதிகளை இணைத்துக்கொண்டு பாராளுமன்றத்தில் தேசிய அரசாங்கத்தை அமைப்பதற்கான ஏற்பாடாகவே அழைப்பாகவே விடுத்துள்ளார்.

தேசிய அரசாங்கத்தை அமைப்பதில் ரணில் விக்கிரமசிங்க நோக்காக உள்ளார். அவ்வாறு அமைக்க வேண்டுமாயின் தமிழ் முஸ்லீம் அரசியல் கட்சிகளை இணைத்தே அமைக்க வேண்டும். ஆனால் தமிழ்க் கட்சிகளைப் பொறுத்தவரை ரணில் விக்கிரமசிங்கவின் பேச்சை நம்பத் தயாராக வில்லை.

சர்வதேச நாணய நிதியத்தின் நிதியை வைத்து பொருளாதாரப் பிரச்சியைத் தீர்க்க முடியாது. அவ்வாறு தீர்க்க முற்படுவதற்கு முன் தமிழர்களின் இனப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டிய நிலைப்பாடு உள்ளது. இந் நேரத்தில் தமிழ் அரசியல்வாதிகள் இவ் அழைப்பு தொடர்பில் நிதானமாகவும் கவனத்துடனும் செயற்பட வேண்டும்.

1999 மற்றும் 2005 ம் ஆண்டு காலப் பகுதியில் ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியின் பின் தற்போது அவருக்கு ஜனாதிபதியாக சந்தர்ப்பமாக இருக்கிறது. 2024 க்கு முன் ஜனாதிபதி தேர்தலை நடாத்தி மக்கள் வாக்கு மூலம் ஆட்சியேற நினைக்கிறார்.

வடகிழக்கு பகுதியிலே தொல்லியல் திணைக்களம் , மகாவலி அபிவிருத்தி திணைக்களம் முதலானவற்றால் தமிழர்கள் தொல்லியல்கள் அடையாளங்கள் அழிக்கப்படுவதுடன் மட்டக்களப்பில் மேய்ச்சல் தரை பிரச்சினை , முல்லைத்தீவு குருந்தூர் மலை பிரச்சினை , வவுனியா வெடுக்குநாறி மலை பிரச்சினை உட்பட தையிட்டியிலும் மக்களின் சொந்த நிலத்தில் புதிய விகாரையை அமைத்து இந்த மாத நடுப்பகுதியில் திறப்புவிழாவையும் மேற்கொள்ளவுள்ளனர்.

இவ்வாறான செயற்பாடுகள் கோட்டபாயவின் ஆட்சியை விட ரணிலின் ஆட்சியிலே அதிகமாக உள்ளது. பயங்கரவாத் சட்டத்தை நீக்குவதற்கு வடகிழக்கு மக்கள் பல போராட்டங்களை செய்து வந்த நிலையில் சிங்கள மக்களுக்கு பாதிப்பு ஏற்படத்தியதை யடுத்து பல நாடுகளின் அழுத்தத்தால் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைக் கொண்டுவரவுள்ளனர்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் ஊடகங்கள், மக்களின் சுதந்திரத்தை முற்றாக பாதிக்கும்.

இனப்பிரச்சினை தீர்வுக்கு முன் காணி அதிகாரம் பொலிஸ் அதிகாரங்கள் காணப்படும் நீண்ட காலமாக நடாத்தப்படாமலுள்ள மாகாண சபைத் தேர்தலை நடாத்தி எமது அதிகாரங்களையாவது தமிழர்கள் பயன்படுத்துவதற்கு ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

எனலே ரணில் விக்கிரமசிங்கா எமது இனப்பிரச்சினை தொடர்பில் அழைப்பதில் தவறில்லை. ஆனால் அதற்கு முன் மகாநாயக்கர்கள் உட்பட தங்களுடைய பக்கத்தினர் இவ் விடயத்தை மேற்கொள்ளத் தெளிவாக உள்ளனரா என்பதை கேட்டறிந்துவிட்டு தயாராக வேண்டும்.

தற்போது நடைபெறும் ஆக்கிரமிப்புக்களை நிறுத்தி மாகாண சபைத் தேர்தலை நடாத்திய பின்னரே இனப்படுகொலைக்கான நீதியை வழங்குவது தொடர்பான பேச்சுவார்த்தைக்கு அழைக்க வேண்டும்.

கந்தரோடையில் தமிழ் பௌத்த எச்சங்கள் உள்ளதாக இனங்காணப்பட்ட இடத்தில் பெரும்பான்மை இனத்தைச் சார்ந்த ஒருவர் காணியை கொள்வனவு செய்து அதனை பிக்கு ஒருவருக்கு தானமாக வழங்கியிருந்த நிலையில், அக் காணியில் பௌத்த விகாரையொன்றை அமைக்க பிரதேச சபையிடம் அனுமதி கோரிய சம்பவமான்று நிகழ்ந்துள்ளது. எனவே தமிழ்த் தேசியப் பரப்பில் ஏராளமான சட்டத்தரணிகள் உள்ளனர். இவ் நடவடிக்கை தொடர்பாக சட்ட நடவடிக்கையை மேற்கொள்ள முன்வரவேண்டும் என்றார்.

உள்நாட்டு செய்திகள் - யாழ்ப்பாணம்

# யாழ்.தையிட்டி விகாரைக்கு கலசம் வைக்கும் நிகழ்வு

## வெளியான புகைப்படங்கள்









யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கு பகுதியில் தையிட்டி விகாரைக்கு கலசம் வைக்கும் நிகழ்வு ஏப்ரல் 27ம் திகதி இடம்பெற்ற நிலையில் அதனுடைய புகைப்படங்கள் தற்போது வெளியாகியுள்ளது.

குறித்த நிகழ்வு தொடர்பான புகைப்படங்கள் இலங்கை இராணுவத்தின் இணையத்தளத்தில் சிலநாட்களுக்கு முன் பதிவிடப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி சுவர்ண போதொட்ட கலந்து கொண்டு விகாரைக்கான கலசத்தை வைத்துள்ளார்.

இராணுவ இணையத்தளத்தின் பதிவில், காங்கேசன்துறையில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க திஸ்ஸ விகாரையில் புனரமைக்கப்பட்ட ஸ்தூபி வைக்கும் பணி 27 ஏப்ரல் 2023 அன்று இடம்பெற்றது. யாழ்ப்பாண மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி சுவர்ண போதொட்ட சுப நிமித்தத்தில், மகா சங்கத்தினரின் 'பிரித்' கோஷங்களுக்கு மத்தியில் கலசத்தை வைத்தார்.



யாழ் மாவட்ட கட்டளைத்தளபதியின் முயற்சிக்கு அமைய திஸ்ஸ விகாரையின் பிரதமகுருவான கிந்தோட்டை நந்தராம தேரர் விகாரை உருவாக்கப்பட்டது.

பண்டைய திஸ்ஸ விகாரையின் வரலாறு கி.பி 3 ஆம் நூற்றாண்டில் தேவநம்பியதிஸ்ஸ மன்னனால் கட்டப்பட்ட ஒரு பௌத்த விகாரையாக இயங்குகிறது. மகாசங்கத்தினர், உத்தியோகத்தர்கள், ஏனைய அணியினர் மற்றும் பக்தர்கள் கலந்து கொண்டு வைபவம் சிறப்பாக இடம்பெற்றது. யாழ்ப்பாணத்தில் பாதுகாப்புப் படையினரின் அயராத முயற்சியால் இந்த ஸ்தூபியின் நிர்மாணப் பணிகள் நிறைவடைந்தன - என்றுள்ளது.

பொதுமக்களின் காணிகள் வலி வடக்கில் குறிப்பிட்ட அளவு விடுவிக்கப்பட்டுள்ள போதிலும் இன்று வரை முற்று முழுதாக விடுவிக்கப்படவில்லை. இவ்வாறான நிலையில், சிறிலங்கா படையினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள நிலங்களில் தமிழர் அடையாளங்களை அழித்து அங்கு பௌத்த சின்னங்களை உருவாக்கி பிரதிஷ்டை செய்யும் செயற்பாடுகள் மறைமுகமாகவும் நேரடியாகவும் இடம்பெறுகின்றன.

உள்நாட்டு செய்திகள் - யாழ்ப்பாணம்

# சட்டவிரோத போதைப்பொருள் பாவனையை குறைக்க நடவடிக்கை! டக்ளஸ்



கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெறும் போதைப்பொருள் பாவனை மற்றும் சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்த விசேட திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாக கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் நேற்று (03-05-2023) உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த கூட்டத்தில், மத்திய மற்றும் மாகாண அமைச்சுக்களால் கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டதுடன் அவை தொடர்பான விடயங்கள் விரிவாக ஆராயப்பட்டு புதிய முன்மொழிவுகளுக்கான அனுமதிகளும் பெறப்பட்டுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறிதரன், எம்.ஏ. சுமந்திரன், செ.கஜேந்திரன், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன், வட மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்கள், திட்டமிடல் பணிப்பாளர், பொலிஸார், இராணுவ அதிகாரிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் எனப் பல்வேறு தரப்பினரும் இந்த கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

உள்நாட்டு செய்திகள் - கிளிநொச்சி

# "தமிழ் ஊடகப் படுகொலையை மூடி மறைக்காதே"

## யாழில் ஊடகவியலாளர்கள் கவனயீர்ப்பு போராட்டம்...!




ஊடக சுதந்திர தினத்தை முன்னிட்டு யாழ் ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் ஊடக சுதந்திரத்தை வலியுறுத்தி நேற்று மதியம் ஊடக அமையத்திற்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டமொன்று இடம்பெற்றது.

தமிழ் ஊடகப் படுகொலையை மூடி மறைக்காதே, ஊடக சுதந்திரம் எங்களின் சுதந்திரம், ஊடகங்களை பயங்கரவாத தடைச் சட்டத்தின் மூலம் அடக்காதே, ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதல்களுக்கு நீதி வேண்டும் என்ற கோசங்களை எழுப்பியவாறு ஊடகவியலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

உள்நாட்டு செய்திகள் - யாழ்ப்பாணம்

# தீர்வுக்காக மக்கள் ஆணையின் படி பேசுவதற்கு தமிழர் தரப்பு தயார்! - ரெலோ சபா குகதாஸ்



இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக இந்த ஆண்டின் இறுதியில் ஒரு முடிவை புதிய அரசியலமைப்பு மூலம் காண இருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மே தின உரையில் குறிப்பிட்டுள்ளார் .

இனப்பிரச்சினைக்கான தீர்வை எதன் அடிப்படையில் பேசுவதாக ரணில் விக்கிரமசிங்க வெளிப்படையாக இது வரை பொது வெளியில் கூறவில்லை அத்துடன் நம்பிக்கை தரும் வகையில் அவரது ஏனைய நடவடிக்கைகள் அமையவில்லை அத்துடன் ஜனாதிபதியின் உரைகள் பதவி ஏற்பில் இருந்து மாறி மாறி சந்தர்ப்ப வாதமாகவே அமைந்துள்ளது.

வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் இலங்கை சுதந்திரம் அடைந்த காலத்தில் இருந்து இலங்கை ஆட்சியாளர்கள் தொடர்ச்சியாக நடாத்திய சனநாயக தேர்தல்களில் மக்கள் ஆணையாக அறுதிப் பெரும்பாண்மையான மக்கள் சமஷ்டித் தீர்வு வேண்டும் என்றே ஆதரவு கோரியுள்ளனர் இதற்கு ஒவ்வொரு தேர்தல் முடிவுகளும் மிகப் பெரும் ஆதாரம் அதன் பிரகாரம் இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கான பேச்சுவார்த்தைக்கு அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வான சமஷ்டி அடிப்படையில் பேச வருமாறு வெளிப்படையாக அரசாங்கம் அறிவித்தால் தமிழர் தரப்பு எப்போதும் தயாராக உள்ளனர்.இந்த நாட்டின் மீள முடியாத பின்னடைவுக்கு இனப்பிரச்சினைக்கான தீர்வு கொடுக்கப்படாமை என்ற உண்மையை உணர்ந்தும் சிங்கள ஆட்சியாளர்கள் கபடத்தனமாக மறைக்காது வெளிப்படையாக இன நல்லிணக்கத்துடன் மேசையில் உக்கார தயார் என்றால் அது தான் தீர்வுக்கான ஆரம்பம்.

உள்நாட்டு செய்திகள் - யாழ்ப்பாணம்

# வடக்கு ஆளுநரின் உத்தரவை உதாசீனம் செய்த வவுனியா அரச அதிபர்

வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவின் உத்தரவை வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத்சந்திர உதாசீனம் செய்த சம்பவமொன்று வவுனியாவில் இடம்பெற்றுள்ளது.

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டமானது வவுனியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று (03.05. 2023) இடம்பெற்றுள்ளது. குறித்த கூட்டத்திற்கு வவுனியா மாவட்ட ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. இந்த கூட்டம் முடிவடைந்த பின்னர் 4.30 மணிக்கு ஊடக சந்தி ப்பு நடைபெறும் என மேலதிக மாவட்ட அரச அதிபர் தி.திரேஸ்குமார் அவர்களால் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், மாலை 4 மணியில் இருந்து மாலை 6 மணி வரை மண்டப வாயிலில் காத்திருந்த ஊடகவியலாளர்கள் கூட்டம் நடைபெற்று கொண்டிருந்த போது இடை நடுவில் வெளியேறிய வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா அவர்களிடம், ஊடக சுதந்திர நாளான இன்று எம்மை ஏன் மாவட்ட செயலக ஒருங்கிணைப்பு கூட்டத்திற்கு அனுமதிக்கவில்லை என கேள்வியெழுப்பியுள்ளனர்.

இதன்போது அதற்கு பதிலளித்த ஆளுநர், நீங்கள் கூட்ட மண்டபத்திற்குள் வரவில்லையா. உங்களை அனுமதிக்கவில்லை யென எனக்கு தெரியாது. மன்னித்துக்கொள்ளுங்கள். யார் வர வேண்டாம் என கூறியது என ஊடகவியலாளரிடம் கேள்வி எழுப்பிய அவர் நீங்கள் மண்டபத்திற்கு செல்லுங்கள். நான் சொன்னதாக அரச அதிபரிடம் சொல்லுங்கள் எனக்கூறி அங்கு நின்ற இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் அவர்களின் பிரதிநிதிகளிடம் அரச அதிபரிடம் தெரியப்படுத்துமாறு கூறிவிட்டு சென்றிருந்தார்.

இராஜாங்க அமைச்சரின் பிரதிநிதிகள் குறித்த விடயத்தை அரச அதிபரிடம் தெரியப்படுத்தியும், ஆளுநரின் உத்தரவை கருத்தில் எடுக்காது கதவுகளை பூட்டி ஊடகவியலாளருக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

உள்நாட்டு செய்திகள் - வவுனியா

# முல்லைத்தீவில் பாடசாலை மாணவர்களை பேருந்துகள் ஏற்றாமல் செல்லும் விவகாரம்! எட்டப்பட்டுள்ள தீர்மானம் என்ன?

""முல்லைத்தீவில் பாடசாலை மாணவர்களை பேருந்துகள் ஏற்றாமல் செல்லும் விவகாரம் தொடர்பில் இனிவரும் காலங்களில் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறாது"" என மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்ட (செயலாற்றல்) இலங்கை போக்குவரத்து சபையின் வட மாகாண பதில் பிராந்திய முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை மாணவர்களை ஏ9 வீதியில் அதிகளவான போக்குவரத்து சேவைகள் இருந்தும் மாணவர்களை ஏற்றாது செல்வதால் பாடசாலை செல்லவும் மீண்டும் பாடசாலையில் இருந்து வீடு வரவும் மிகவும் சிரமப்படுகின்றனர் எனவும் பல்வேறு தரப்பினருக்கும் தெரிவித்தும் எந்த நட வடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் இதனால் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர் என ஊடகங்களில் தொடர்ச்சியாக சுட்டிக்காட்டப்பட்டது.

எனவே இவ்விடயம் தொடர்பாக இலங்கை போக்குவரத்து சபையின் வட மாகாண பதில் பிராந்திய முகாமையாளர் தெரிவித்ததாவது, "நேற்று (3.05.2023) பாடசாலை மாணவர்களை இலங்கை போக்குவரத்து சபை பேருந்துகளில் ஏற்றாமை தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு வருகை தந்து இந்த விடயம் தொடர்பான விளக்கத்தை வழங்கினோம். பாடசாலை மாணவர்களை ஏற்ற வேண்டியது கட்டாயம் என்பதனால் அவர்களை கட்டாயம் ஏற்ற வேண்டும். வடமாகாணத்துக்கு உட்பட்ட சகல சாலை முகாமையாளர்களுக்கும் ஏற்கனவே உரிய அறிவுறுத்தல்கள் வழங்கியுள்ளோம்.

அதைவிட வெளி மாகாணங்களில் இருந்து வருகின்ற பேருந்துகள் ஏற்றவேண்டும் என சம்மந்தப்பட்ட பேருந்துகளின் பிராந்தியத்துக்கு பொறுப்பானவர்களுக்கு அறிவித்திருந்த போதும் சில பேருந்துகள் மாணவர்களை ஏற்றாது செல்வது தொடர்பில் முறைப்பாடுகள் தொடர்ந்து கிடைத்த வண்ண மிருந்தது.

நேற்றைய தினம் (2.05.2023) நாங்கள் நேரடியாக சென்று பேருந்துகள் ஏற்றாது செல்வது தொடர்பாக பார்வையிட்டு அறிக்கைகளை தயாரித்துள்ளோம்.

அங்கு மாணவர்களை ஏற்றாது சென்ற பருத்தித்துறை சாலைக்கு சொந்தமான கொழும்பு பேருந்துக்கு சாலை முகாமையாளருக்கு அறிவித்து நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இதேபோல் வெளி மாகாண பேருந்துகளுக்கு இலங்கை போக்குவரத்து சபை தலைவருக்கு அறிவித்து அவர்களுக்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். ஆகவே இனிவரும் காலங்களில் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறாது உரிய நடவடிக்கைகள் நாங்கள் மேற்கொள்வோம்" என்று தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு செய்திகள் - முல்லைத்தீவு

## நாட்டின் நெருக்கடி தீர்ந்து...

இந்த விடயம் தொடர்பில் சுரேஷ் க.பிரேமச்சந்திரன் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த ஊடக அறிக்கையின் முழு விபரம் வருமாறு: கடந்த மேதினத்தன்று ஜனாதிபதி ஆற்றிய உரையின் ஒருபகுதியாக இனப்பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் என்றும் இந்த வருடம் முடிவிற்குள் இனப்பிரச்சினை தீர்க்கப்படும் என்றும் சிங்கள, தமிழ் முஸ்லிம் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தீர்வு காணப்படவேண்டும் என்றும் தனது கருத்தை வெளியிட்டுள்ளார்.

இதற்கு முன்பாக கடந்த வருட இறுதியில் நாடாளுமன்றத்தில் அவர் உரையாற்றிய பொழுது, பதின்மூன்றாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்குச் சம்மதமா என ஏனைய கட்சிகளிடம் கேட்டபொழுது முன்னாள் ஜனாதிபதியும் பொதுஜன பெரமுனவின் தலைவருமான மகிந்தராஜபக்சவை தாங்கள் அதனை ஆதரிப்பதாகக் கூறினார். அதேபோல் எதிர்த்தரப்பில் இருந்த சஜித் பிரேமதாசவும் அதனை ஆதரிப்பதாகத் தனது கருத்தை வெளியிட்டார்.

ஒருசில சிங்கள இனவாதிகளைத் தவிர, பதின்மூன்றாவது திருத்தம் முழுமையாக நிறைவேற்றப்படவேண்டும் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்துகள் இருக்கவில்லை. அதுமாத்திரமல்லாமல், 1988ஆம் ஆண்டு ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் அரசாங்கத்தில் 6இல் ஐந்து பெரும்பான்மையுடன் பதின்மூன்றாவது திருத்தம் அரசியல் சாசனத்தில் சேர்க்கப்பட்டது.

ஆகவே அதனை நடைமுறைப்படுத்துவதில் இப்பொழுதைய ஜனாதிபதிக்கு எந்தவிதமான தடங்கல்களும் இருக்கப்போவதில்லை. கடந்த பெப்ரவரி 4ஆம் திகதி இலங்கையின் சுதந்திர தினத்திற்கு முன்பாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று கூறியபோதிலும் எதுவும் நடைபெறவில்லை. அதுமாத்திரமல்லாமல், சகல தமிழ், சிங்கள, முஸ்லிம் கட்சிகளையும் அழைத்து ஜனாதிபதி அவர்கள் மூன்று சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தியுமிருந்தார்.

அதில் தமிழ் தரப்பில் முக்கியமான கோரிக்கையாக இப்பொழுது நடைபெற்றுவரும் காணி அபகரிப்பு அல்லது காணிகளைக் கபளீகரம் செய்தல், சைவக்கோயில்களை உடைத்து புத்த கோயில்களைக் கட்டுதல், வடக்கு-கிழக்கில் குடிசனப் பரம்பலை மாற்றும் வகையில் சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளல் போன்ற சகல நடவடிக்கைகளையும் உடன் நிறுத்துமாறு கோரியிருந்தும் கூட, இதுவரை எதுவும் நடைபெறவில்லை.

இந்த இலட்சணத்தில், அரசியல் சாசனத்தில் உள்ளவற்றையே நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காத ஒரு ஜனாதிபதி, புதிய அரசியல் சாசனம் பற்றியும் இந்த வருடத்திற்குள் இனப்பிரச்சினை தீரும் என்று கூறுவது தமிழ் மக்களை மாத்திரமல்ல முழு உலகத்தையுமே ஏமாற்றும் ஒரு செயற்பாடாகும்.

1987ஆம் ஆண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டதன் பின்னர், இனப்பிரச்சினைத் தீர்விற்காக பல்வேறு ஜனாதிபதிகளாலும் பல்வேறு பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டன. பிரேமதாச, மங்கள முனசிங்க தலைமையில் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவொன்றை நியமித்தார்.

அந்த அறிக்கை நடைமுறைப்படுத்தப்படாமல் தூக்கிவீசப்பட்டது. அதற்குப் பின்னர் பதவியேற்ற சந்திரிகா குமாரதுங்க பண்டாரநாயக ஒரு தீர்வுத்திட்டத்தைக் கொண்டுவந்தார்.

பின்னர் அதுவும் கைவிடப்பட்டது. அவரைத் தொடர்ந்து மகிந்த ராஜபக்ச அரசாங்கத்தில் பேராசிரியர் திஸ்ஸவிதாரன தலைமையில் சர்வகட்சி குழுவொன்று நியமிக்கப்பட்டது. அந்த அறிக்கையும் கண்டுகொள்ளாமலே விடப்பட்டது.

பின்னர், ரணில் மைத்திரி ஆட்சியில் புதிய அரசியல் சாசனத்திற்கான யோசனைகள் முன்வைக்கப்பட்டன. அது நாடாளுமன்றத்திலும் விவாதிக்கப்பட்டது. அதன் நிலை என்ன என்பது பற்றி யாருக்கும் தெரியாது.

இலங்கையை ஆட்சி செய்துவரும் அனைத்து அரசாங்கங்களும் இனப்பிரச்சினைத் தீர்வினைக் காலம் கடத்துவதை நோக்கமாகக் கொண்டே பேச்சுவார்த்தைகளை நடத்தி வருவதுடன் ஆணைக்குழுக்களையும் நியமிக்கின்றார்களே தவிர, இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான இதயசுத்தியுடனான எண்ணம் இவர்களிடம் இருப்பதாகத் தெரியவில்லை.

சென்றவாரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற தமிழ்க் கட்சிகள் கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவரைச் சந்தித்து தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் அரசியல் நெருக்கடிகள் பற்றிப் பேசியதுடன், முதற்கட்டமாக பதின்மூன்றாவது திருத்தம் முழுமையாக நிறைவேற்றப்படவேண்டும் என்றும் அதற்கு இந்தியா முழுமையான உதவிகள் ஒத்தாசைகளை வழங்க வேண்டும் என்றும் கோரியிருந்தன.

அதனை ஏற்றுக்கொண்டு, பதின்மூன்றை முழுமையாக நிறைவேற்ற இந்தியா உதவிக்கரமாக இருக்கும் என்று இந்திய உயர்ஸ்தானிகரும் தனது அறிக்கையின் மூலம் தெளிவுபடுத்தியிருந்தார்.

இந்த நிலையில்தான் இலங்கையின் ஜனாதிபதி மீண்டும் ஒருமுறை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாகவும் இந்த வருட இறுதிக்குள் தீர்வு காணப்படும் என்றும் கூறியிருக்கின்றார். இன்றைய காலகட்டத்தில் புதிய அரசியல் சாசனம் ஒன்றைக் கொண்டு வருவதற்கான உடனடி ஏதுநிலைகள் இல்லை.

எனவே முதற்கட்டமாகத் தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெறும்பொருட்டு, அரசியல் சாசனத்தில் உள்ள பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

அதனைத் தொடர்ந்து ஏற்கனவே அனைத்து ஜனாதிபதிகளும் ஏற்றுக்கொண்டதைப் போன்று, இது முழுமையான தீர்வு இல்லை என்ற அடிப்படையில், இனப்பிரச்சினைக்கான ஒரு முழுமையான தீர்வைக்காண இன்றைய ஜனாதிபதி இதயசுத்தியுடன் செயற்படவேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

## மக்களை மோசமாக பாதிக்...

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு என்பது மிகவும் மோசமாக எமது மக்களை பாதிக்கக் கூடியது. ஏனெனில் அதில் இரண்டு விதமான அபாயங்கள் உண்டு ஒன்று உள்ளூர் வங்கிகள் இதனால் பாதிப்படையலாம் மற்றையது ஊழியர் சேமலாப நிதி மற்றும் நம்பிக்கை பொறுப்பு நிதி ஆகியவை இந்த உள்நாட்டு கடன் மறு சீரமைப்பின் போது அவற்றினுடைய பெறுமதி வெகுவாக குறைவடைவதற்கான சாத்திய கூறுகள் உண்டு.

ஆகவே மே தினத்தில் அரசாங்கத்தைச் சேர்ந்த கட்சிகள் ஊழியர்கள் பற்றிய பல விதமான கருத்துக்களை கூறி இருக்கின்றார்கள். ஆகையினால் உள்நாட்டிலே சிறு தொழிலாளர்கள் உழைத்து சேமித்து வைத்துள்ள சிறு தொகையையும் இழக்க கூடிய ஒரு அபாய நிலை இப்போது அவர்களை நெருங்கி உள்ளது.

இது விசேடமாக சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஒற்றையாட்சிக்குள் தீர்வு...

வேண்டுமாயின், தயவுசெய்து இந்தப் பொறிமுறைக்குள் வந்து விசேடமாக நாடாளுமன்றத்தில் ஒரு அரசாக நாம் அனைவரும் இணைந்து செயற்படுவோம்" என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ஐக்கிய தேசியக் கட்சியின் மே தின நிகழ்வு உரையில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ரணில் அரசுடன் இணைந்து தேசிய பிரச்சினைக்குத் தீர்வைக் காண முற்றாக மறுத்துள்ளது.

மேலும் "தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு ஒற்றையாட்சிக்குள் தீர்வு இல்லை" என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறியுள்ளார்.

## துப்பாக்கி முனையில் படுகொ...

பயங்கரவாத தடைச் சட்டம் எமக்கு புதிதல்ல. ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்படும்போதும் பேனாவுடனே அலைந்தோம் ஊடக சுதந்திரம் உறுதிப்படுத்தபடுத்தப்பட வேண்டும் என மூத்த ஊடகவியலாளர் குமாரசாமி செல்வகுமார் தெரிவித்தார்

சர்வதேச ஊடக சுதந்திர தினத்தை முன்னிட்டு நேற்று யாழ் ஊடக அமையத்தினால் முன்னெடுக்கப்பட்ட கவனயீர்ப்பு போராட்டத்தினை தொடர்ந்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், ஊடகவியலாளர்களது பிரச்சினை தொடர்ந்த வண்ணமே உள்ளன. ஊடகவியலாளர்களின் கருத்துக்களை காது கொடுத்து கேட்க கூட இந்த அரசு தயங்குகின்றது. பயங்கரவாத சட்டம் என்பது மூன்று தசாப்த காலம் ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்ட போது இங்கே இருந்தது.

இப்பொழுது அந்த சட்டத்தை மீண்டும் கொண்டுவர முயல்கிறார்கள் .இந்த சட்டத்தை கண்டு நாங்கள் பயப்படவில்லை. அதாவது எமது சக ஊடகவியலாளர்கள் வீதிகளில் சுடப்பட்ட பொழுது நாம் பேனாவை மட்டுமே கையில் கொண்டு அலைந்தோம். இந்த அட்டூழியங்களை பேனா கொண்டு தான் சர்வதேசத்திற்கு சொன்னோம்.

எங்களை சுடுகின்றார்கள், எங்களுக்கு உரிமை இருக்கிறது. இந்த நாட்டில் இருக்க எமக்கு உரிமை இருக்கிறது. நாங்கள் புதிதாக ஒன்றும் கேட்கவில்லை. இந்த நாட்டிலே வாழுகின்ற மக்கள் கேட்கின்ற அதே விடயங்களை தான் நாமும் கேட்கின்றோம்.

எமது சக ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டதற்கு காரணம் என்ன? பேனா தூக்கிய அனைத்து ஊடகவியலாளர்களும் உயிர் இருக்கும் வரை கூறிக் கொண்டே இருப்போம் சுடப்பட்டது அநீதி.

சுடப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு விசாரணை வேண்டும், நீதி வேண்டும், சர்வதேசம் இதனை பார்க்க வேண்டும், சர்வதேசம் சர்வதேசம் என்று நாங்கள் சொல்கின்றோம். உலகில் சின்ன நிலபரப்பாக இருக்கும் இங்கு இடம்பெறும் விடயங்கள் பெரிதாக பேசப்படுகின்றனவே தவிர எந்தவொரு நடவடிக்கையும் எடுத்ததாக இல்லை. விலை பேசும் உலகில் ஒவ்வொரு நாடுகளும் தம்முடைய தேவைக்காக இலங் கையை பயன்படுத்துகின்றன.

இந்த மக்கள் சிறுபான்மையினரை கண்டு கொள்ளாமல் இருப்பதை நாங்கள் சுட்டி காட்டிகொண்டே இருப்போம் எங்கள் ஊடகவியலளர்கள் பணியாற்றி படுகொலை செய்யப்பட்டவர்களின் பாதையில் நாமும் பயணிப்போம் என அவர் மேலும் தெரிவித்தார்.

## கிளிநொச்சியில் சட்டவிரோத...

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்று வரும் சட்டவிரோத மணல் அகழ்வுகள் மற்றும் போதைப்பொருள் கடத்தல்கள் என்பவற்றின் பின்னணியில் கிளிநொச்சி பொலிஸார் செயற்பட்டு வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் பகிரங்கமாக குற்றம் சாட்டியுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று (03-05-2023) நடைபெற்ற போது கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் சட்டவிரோத மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை தொடர்பில் பிரதேச செயலாளர்கள் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரால் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இதனையடுத்து இவ்வாறான மணல் அகழ்வுகளின் பின்னணியிலும் போதைப்பொருள் விவகாரத்தின் பின்னனியிலும் பொலிஸாரே செயற்பட்டு வருகின்றனர் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன் மற்றும் செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் பகிரங்கமாக சுட்டிக்காட்டியிருந்தனர்.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் குறிப்பிடுகையில், நேற்றைய தினம் மணல் மாபியாக்களின் முழு ஒத்துழைப்புடன் கிளிநொச்சியில் பொலிஸாரால் விளையாட்டுப் போட்டி ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

சட்டவிரோத மணல் அகழ்வுகள் தொடர்பில் பொலிஸாருக்கு நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் கடிதம் எழுதுகின்ற போது அந்த கடிதத்தினை மண் மாபியாக்களுக்கே காட்டியுள்ளனர்.

இதேவேளை மாவட்டத்தில் இடம்பெறுகின்ற அத்தனை சட்டவிரோத செயல்களின் பின்னணியிலும் பொலிஸாரே இருக்கின்றனர். அதேநேரம் மாவட்டத்தில் சேவையாற்றுகின்ற அதிகாரிகளால் நடவடிக்கை எடுக்க முடியாத அளவுக்கு பொலிஸாரின் செயற்பாடுகள் அமைந்திருக்கின்றது என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரகுமார் சுட்டிகாட்டியுள்ளார்.

பிரதேச பொது அமைப்புகளும் பொலிஸாரின் துணையுடனே மணல் அகழ்வுகள் இடம்பெறுகின்றது என்றும், எந்த விதமான அனுமதிப்பத்திரங்களும் வழுங்கப்படாத நிலையில் கிராமப்புறங்களில் குறிப்பாக கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட ஊரியான், கோரக்கண், கட்டு கல்லாறு தட்டுவன்கொட்டி ஆகிய பகுதிகளில் தொடர்ச்சியாக மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் பின்னணியில் பொலிஸாரே இருக்கின்றனர் என்றும், கூடுதலான பொலிஸ் அதிகாரிகளுக்கு சொந்தமான டிப்பர் வாகனங்களும் குறித்த மணல் அகழ்வுகளில் ஈடுபடுவதாகவும், பொது அமைப்புக்களால் சுட்டிக்காட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

CREATIVE DESIGNER
every design has a story
+94 77 3828 594

# தனியார் காணியில் வடமாகாண ஆளுநரின் அனுமதியின் பேரில் கட்டப்பட்ட விகாரை அகற்றப்பட வேண்டும்!

## கஜேந்திரன் எம். பி கோரிக்கை!

தனியார் காணியில் வடமாகாண ஆளுநரின் அனுமதியின் பேரில் கட்டப்பட்ட விகாரை அகற்றப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

தையிட்டியில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 1990 ம் ஆண்டு சிறிலங்கா இராணுவத்தினால் பலவந்தமாக வெளியேற்றப்பட்டிருந்தார்கள். யுத்தம் முடிவடைந்து 14 வருடங்கள் ஆகின்ற நிலையில் மக்களின் பெருமளவிலான காணிகள் இன்றுவரை ஒப்படைக்கவில்லை.

தனியார் காணியில் வடமாகாண ஆளுநரின் அனுமதியின் பேரில் கட்டப்பட்ட விகாரை அகற்றப்படுவதுடன் தனியார் காணிகள் யாவும் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்பது



எமது கோரிக்கையாகக் காணப்படுகின்றது.

சர்வதேச ஐ.சி.பி.ஆர் சட்ட நியமங்களின் படி தமிழர் சிங்களவருக்கிடையில் இன முறுகலை ஏற்படுத்தும் விதமாக இவ் விகாராதிபதி , இராணுவத்தினர் மற்றும் இதற்குதவிய அரச திணைக்களங்கள் ஆகியவை சர்வதேச சட்டத்தை மீறியுள்ளன. அந்த வகையில் இவர்களுக்கெதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

நாளை 5 ம் திகதி வரை இப் போராட்ட த்தை முன்னெடுக்கவுள்ளதுடன் இவ் விகாரை செயற்பாடுகளை முற்று முழுதாக முடக்கும் வரையில் தொடர்ந்தும் போராட்டங்களில் ஈடுபடவுள்ளோம். - என்றார்

உள்நாட்டு செய்திகள் - யாழ்ப்பாணம்

# எமக்கு பௌத்த மேலாதிக்கத்தின் அச்சுறுத்தலே தவிர வேறு எந்த மதங்களின்

## அச்சுறுத்தலும் இல்லை ஐங்கரநேசன் கருத்து!



எமக்கு பௌத்த மேலாதிக்கமே அச்சுறுத்தலே தவிர வேறு எந்த மதங்களும் அச்சுறுத்தல் இல்லை என தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத் தலைவர் ஐங்கரநேசன் தெரிவித்தார்.

தையிட்டி விகாரையை சுற்றியுள்ள காணிகளை விடுவிக்குமாறு கோரி நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சட்டவிரோதமாக மக்களுடைய காணியில் அமைக்கப்பட்ட விகாரையை அகற்றி தங்களுடைய காணிகளை மீள ஒப்படைக்குமாறு கோரி நேற்று மக்கள் போராட்டம் ஒன்றை நடாத்தியுள்ளனர்.

நியாயமான அவர்களின் போராட்டத்திற்கு தலைசாய்க்க வேண்டிய தேவைப்பாடு அரசாங்கத்திற்கு உண்டு குண்டு.வீசி.எம் மக்களைக் கொலை செய்த இராணுவமும் அரசாங்கமும் தற்பொழுது கலாசார ரீதியாக , பண்பாடு ரீதியாக, மத ரீதியாக பௌத்த சின்னங்களை அமைப்பதன் மூலமும் மக்களுடைய நிலங்களை பிடுங்கி மக்களை நிலங்களற்றவர்களாக ஆக்குவதன் மூலமும் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பை மேற்கொண்டு வருகின்றது.

இவ் இன அழிப்பிற்கு எதிராக தமிழ் மக்கள் ஒன்றிணைய வேண்டும். அரசாங்கம் தமது முகவர்கள் மூலமும் புலனாய்வாளர்கள் மூலமும் திட்டமிட்ட மத ரீதியான சாதி ரீதியான பிரிவினைகளை ஏற்படுத்த முயல்கின்றது. இவை தொடர்பில் மக்கள் விழிப்படைய வேண்டும்.

எமக்கு பௌத்த மேலாதிக்கமே அச்சுறுத்தலே தவிர வேறு எந்த மதங்களும் அச்சுறுத்தல் இல்லை. எமக்கு சிவ சேனைகளோ உருத்திர சேனைகளோ தேவையில்லை. இவ்வாறான போராட்டங்களுக்கு தமிழர் சேனையாக திரள்வதன் மூலமே கட்டமைக்கப்பட்ட இனவழிப்பிலிருந்து எமது மக்களையும் எமது தேசத்தையும் காப்பாற்ற முடியும் - என்றார்

உள்நாட்டு செய்திகள் - யாழ்ப்பாணம்

# பௌத்தர்கள் இல்லாத இடத்தில் விகாரையை அமைத்து மக்களிடையே குரோதத்தை ஏற்படுத்திய அனைவரும் கைது செய்யப்பட வேண்டும்

## சட்டத்தரணி காண்டீபன் தெரிவிப்பு !



பௌத்தர்கள் இல்லாத இடத்தில் விகாரையை அமைத்து மக்களிடையே மனக்குரோதத்தை ஏற்படுத்திய அனைவரும் கைது செய்யப்பட வேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கொள்கைப் பரப்புச் செயளாளர் நடராஜர் காண்டீபன் தெரிவித்தார்.

தையிட்டி விகாரையை சுற்றியுள்ள காணிகளை விடுவிக்குமாறு கோரி இன்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுமக்களின் காணிகளைக் கைப்பற்றி தையிட்டியில் விகாரையொன்று கட்டிமுடிக்கப்பட்டு கலசம் வைக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் விகாரை பற்றிய பிரச்சினை எழுப்பப்பட்டு கட்டுமான பணிகள் நிறுத்தப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் கோரிக்கை விடுத்த நிலையிலே கொரோனா காலத்தில் இப்பிரதேசத்தில் மக்களை வர அனுமதிக்காது விகாரையைக் கட்டிமுடித்து கலசம் வைத்துளனர்.

உடனடியாக இந்தக் காணிகள் பொதுமக்களிடம் ஒப்படைக்கப்படுவதுடன் ஆள் சார் இனப்படுவகாலையைப் புரிந்த இராணுவம் தாயகப் பகுதியிலிருந்து முற்றுமுழுதாக வெளியேற வேண்டும்.

குறித்த இராணுவத்தால் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட விகாரைக்கு பாதுகாப்பு வழங்கும் பொலிசார் உடனடியாக இடமாற்றப்பட வேண்டும்.

ஐ.சி.பி.ஆர் சட்டம் மற்றும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் பௌத்தர்கள் இல்லாத இடத்தில் விகாரையை அமைத்து மக்களிடையே மனக்குரோதத்தை ஏற்படுத்திய இந்த விகாராதிபதியுட்பட அனைவரும் கைது செய்யப்பட வேண்டும். என்றார்.

உள்நாட்டு செய்திகள் - யாழ்ப்பாணம்





# யாழ்.தையிட்டியில் தொடரும் பதற்றம்..!

நேற்று மாலை 3 மணியளவில் தையிட்டியில் இடம்பெற்ற போராட்டத்தினை தொடர்ந்து போராட்டத்தில் முன்பக்கமாக உள்ள தனியார் காணியில் கூடாரம் அமைத்து போராடிக்கொண்டிருந்த நிலையில் திடீரென அங்குவந்த காவல்துறையினர் இங்கு கூடாரம் அமைக்க காணி உரிமையாளரின் அனுமதி உள்ளதா என கேட்ட நிலையில் போராட்டகாரர்கள் அனுமதி பெற்றா இவ்வளவு பரப்பு காணியில் விகாரை அமைக்கப்பட்டது என காவல்துறையினரிடம் திருப்பி கேள்வி எழுப்பினர்.

உரிய காணி உரிமையாளரிடம் அனுமதி பெற்று வருகை தந்த நிலையில் காவல்துறையினரால் கூடாரம் கைப்பற்றப்பட்டு விகாரையில் முன்பாக இருந்த பொதுமக்கள் பலர் குறித்த பகுதியில் இருந்து அகற்றப்பட்டனர்.

இந்நிலையில் குறித்த விகாரையின் ஒழுங்கை முடக்கப்பட்ட நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், சிரேஷ்ட சட்டத்தரணி காண்டீபன் உட்பட நால்வர் முடக்கப்பட்ட நிலையில் ஆரம்பத்தில் காவல்துறை ஜீப்ரக வாகனத்தினை குறுக்கே விட்டு நால்வரும் முடக்கப்பட்டனர்.

இதே நிலையில் குறித்த பகுதியில் பதற்ற சூழல் ஏற்பட்டது. வீதியால் சென்று வரும் பொதுமக்கள் அநாவசியமான முறையில் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டனர். இரவு 9:30 மணியளவில் இரு உழவு இயந்திரங்களில் இரும்பு முள்வேலிகள் கொண்டுவரப்பட்டு விகாரையில் இரண்டு பக்கமும் முள்வேலிகள் இடப்பட்டு உள் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டது.

## ஊடகங்களுக்கு அச்சுறுத்தல் செய்தி சேகரிக்க தடை



இந்நிலையில் உள்ளிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் உட்பட நால்வர் இருக்கும் பகுதிக்கு செல்வதற்கு ஊடகவியலாளர்களிற்கு அனுமதி மறுக்கப்பட்டது. எதற்காக ஊடகவியலாளர்கள் செல்ல தடை விதிக்கின்றீர்கள் என வினவிய பொழுது மேலிடத்திலிருந்து தமக்கு உத்தரவு வழங்கப்பட்டதாக தெரிவித்தனர். மேலும் நீதிமன்ற கட்டளை இன்றியே இவ்வாறு குறித்த பகுதிக்கு செல்ல தடை விதிக்கப்பட்டது.

## லத்தியுடன் மிரட்டிய காவல்துறையினர்

ஊடகவியலாளர்களை தடுத்ததை அடுத்து காவல்துறை பொறுப்பதிகாரியுடன் கதைக்க முனைந்த பொழுது லத்தியினை காட்டி காவல்துறையினர் அச்சுறுத்தினர்.



## சுகாஷ் - காவல்துறை இடையே வாக்குவாதம்

இந்நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரனை சந்திக்க தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரட்னம் சுகாஷ் வருகை தந்த பொழுது உள்ளே செல்ல காவல்துறையினர் அனுமதி மறுத்த நிலையில் வாக்குவாதம் நிலவியது.



நீதிமன்ற கட்டளையை காட்டுமாறும் ஜனநாயக ரீதியாக நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரனை சந்திக்க எனக்கு உரிமையுண்டு எனவும் சுட்டிக்காட்டினார். இந்நிலையில் கடமையிலிருந்த காவல்துறையினர் வெளிநாட்டு பணம்பெறுவதற்காகவே இவர்கள் இப்படி செய்யகின்றார்கள் எனவும் சுகாஷினை நோக்கி குடித்துவிட்டா வருகை தந்துள்ளீர் என்று நாகரிகமற்றமுறையில் கேள்விகளை கேட்டனர்.



நான்குடித்துவிட்டு வருகை தந்திருந்தால் உடனடியாக பரிசோதனை செய்யவும் என காவல்துறையினருடன் தர்க்கப்பட்டநிலையில் பாதுகாப்பு பலப்படுத்தபட்ட நிலையில் சுகாஷ் உட்பட்ட குழுவினரால் உள்ளே செல்லமுடியாத சூழல் ஏற்பட்டது.

இதனையடுத்து போராட்ட தலத்திற்கு செல்ல முடியாது தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர், பொதுமக்கள் உட்பட சிலர் முள்வேலிகளுக்கு வெளியே வீதியில் தரித்துள்ளார்கள். இராணுவ, காவல்துறை புலனாய்வாளர்கள் உட்பட பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது. அதிகளவு தமிழ் காவல்துறையினரு கடமையில் ஈடுபட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

## யாழ்.தையிட்டியில் பதற்றம் - கூடாரங்களை பிடுங்கியெறிந்து இராணுவத்தினர் அடாவடி..!

யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கு தையிட்டியில் சட்டவிரேதமாக அமைக்கப்பட்டுள்ள விகாரையை அகற்றுமாறு வலியுறுத்தி நேற்று போராட்டம் இடம்பெற்றுவந்த நிலை



யில் போராட்டகாரர்களை அச்சுறுத்தி காவல்துறையினர் அவர்களை அங்கிருந்து அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

குறிப்பாக அப்பகுதிக்குள் ஊடகவியலாளர்கள் உட்பட பொதுமக்கள் யாரும் நுழையமுடியாதவாறு காவல்துறை வாகனங்களை வீதிக்கு குறுக்கே நிறுத்தி தடையேற்படுத்தியுள்ளனர்.

இந்நிலையில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், சட்டத்தரணி ந.காண்டீபன் உள்ளிட்ட சிலர் காவல்துறையினருடன் வாதம் புரிந்து வருகின்றனர்.



இதன் காரணமாக அப்பகுதியில் காவல்துறையினர் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

வலிகாமம் வடக்கு தையிட்டி பிரதேசத்தில் இதுவரை காலமும் விடுவிக்கப்படாமல் உள்ள பொதுமக்களின் காணிக்குள் அமைக்கப்பட்டு வருகின்ற பௌத்த விகாரைக்கு மேலதிகமாக அதனை சுற்றியுள்ள பொதுமக்களின் காணிகளும் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

இதனை எதிர்க்கும் முகமாக பாதிக்கப்பட்டுள்ள மக்கள் சார்பாக பொதுமக்களும் பல்வேறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் ஒன்றிணைந்து நேற்று கண்டனப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பருத்தித்துறை வீதி, தையிட்டி கலைவாணி வீதி முகப்பில் நேற்று புதன்கிழமை பிற்பகல் ஆரம்பித்த ஆர்ப்பாட்டம் பேரணியாக நகர்ந்து தையிட்டி விகாரை வரை சென்று விகாரைக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

14 குடும்பங்களுக்கு சொந்தமான அண்ணளவாக 100 பரப்பு காணியை விடுவிக்க கோரியும் சட்டவிரோதமாக கட்டப்பட்ட பௌத்தக் கட்டுமானத்தை அகற்றக் கோரியும் பௌத்த மயமாக்கல் திணிப்பை எதிர்த்தும் போராட்டக்காரர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சட்டவிரோதமாக கட்டப்பட்ட தையிட்டி விகாரையை அகற்றுமாறு கோரி நேற்றைய தினம் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில், அதனை தொடரச்சியாக மூன்று நாட்களுக்கு முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.
நேற்று முதல் எதிர்வரும் வெசாக் தினமான வெள்ளிக்கிழமை வரையில் தொடர் போராட்டத்தை முன்னெடுப்பதற்காக குறித்த பகுதியில் பந்தல் அமைக்க முற்பட்ட நிலையில், காவல்துறையினர் அதற்கு எதிர்ப்பு வெளியிட்டனர்.

இந்த நிலையில் தனியார் காணியொன்றில் பந்தல் அமைக்கப்பட்டு போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில். ஆனபோதும் போராட்டகாரர்களை அச்சுறுத்தி காவல்துறையினர் அவர்களை அங்கிருந்து அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

## யாழ்.தையிட்டி பகுதியில் தொடரும் அமைதியின்மை! சட்டதரணி சுகாஸ் வெளியிட்ட தகவல்



ஜனநாயக முறைக்கு கீழ் முன்னெடுக்கப்பட்ட போராட்டதில் ஈடுபட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் மற்றும் சட்டத்தரணி ந.காண்டீபன் இருவரையும் பொலிஸார் தனிப்படுத்தி தடுத்து வைத்திருப்பதாக“ சட்டதரணி சுகாஸ் தெரிவித்துள்ளார்.



உள்நாட்டு செய்திகள் - யாழ்ப்பாணம்